Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate, Gingee
CC.No. 249 / 2020

PW -3

Name - கேசவன்

Father Name - ரங்கசாமி

Village - புத்தகரம்

Taluk -

Religion -

Age - 45

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 15.03.2022

முதல் விசாரணை

நான் புத்தகரம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன். அ.சா1, 2 தெரியும், அவர்கள் என் உறவினர்கள். இவ்வழக்கின் எதிரிகள் மணி மற்றும் அலமேலு என்பவர்களை தெரியும் அவர்கள் என் தெருவில் வசித்து வருகிறார்கள். அவர்கள் இன்று ஆஜர் ஆகி இருந்தால் அவர்களை என்னால்அடையாளம் காட்ட இயலும். கடந்த 23.03.2017 ம் தேதி இரவு சுமார் 7.30 மணிக்கு மேல் , மணி மற்றும் அலமேலு ஆகியோர் பாஸ்கரன் வீட்டில் முன்பு நின்று ரோட்டில் ஆக்கிரமைத்து போடபப்பட்டு இருந்த சிமேன்ட் தரை சம்மந்தமாக பாஸ்கரன் மணைவி யை தெவியா என்று அலமேலு திட்டினார். பாஸ்கரனை மணி என்பவர் ரோட்டை விட்டு தாண்டி வந்தால் உன்னை வெட்டி விடுவேன் என்று மிரட்டினார். மணி என்பவர் பாஸ்கரன் வீட்டிற்கு முன்பு வெளியே வர இயலாதவாறு கற்களை அடுக்கி வைத்தார். நான் சம்பவம் நடக்கும்போது சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். எங்கள் தெருவை சார்ந்தவர்களும் சம்பவம் நடக்கும்போது இருந்தார்கள். அதன் பின்பு மறுநாள் காலை கோமதி சம்பவத்தை பற்றி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். ந.பி பெற்றாள் காவல் நிலையத்தார் என்னை விசாரணை செய்தார்கள்.

குறுக்கு விசாரணை

என் கழனியும், எதிரியின் கழனியும் அருகாமையில் உள்ளது என்றால் சரிதான்,, எனக்கும் மணி என்பவருக்கும் ஒரே வரப்பு என்பதால்அடிக்கடி வாய் தகராறு ஏற்படும் என்றால் சரிதான். ஆனால் பெரியதகராறு ஏதும் ஏற்படவில்லை. அ.சா 1 கோமதி என் பக்கத்துவீட்டுக்காரர். சம்பவம் நடக்கும்போது நான் வீட்டில் இருந்தேன். சத்தம் கேட்டுதான் நான் வெளியே வந்து பார்த்தேன். எங்கள் சாலையில் லாரி ,

டிரேக்டர் செல்லும் அளவிற்க அகலமாக இருக்கும். அ.சா1, 2 ஆகியோர் பத்திரிக்கையாளர்கள் என்றால் சரிதான். ஊரில் ஏதாவது பிரச்சனை என்றால் அ.சா.1, 2 ம் மனு செய்வார்களா? என்றால் இல்லை. போலிசார் என்னை 24.03.2017 ம் அன்று விசாரணை செய்தார்கள். அதன் பின்பு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை. எனக்கும் எதிரி மணி என்பவருக்கும் வரப்பு சம்மந்தமாக முன் விரோதம் இருந்து வந்ததால் நான் அ.சா1 க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா1 கோமதி தான் என்னை இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்க சொன்னார் என்றால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.

Taken down before/me in Open
Court and read over/interpreted to
the witness and acknowledged by
him/her to be correct.
Judicial Magistrate, Gingee.